

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.6.2023) முகாம் அலுவலகத்தில், டாடா குழுமத்தின் தலைவர் என்.சந்திரசேகரன் சந்தித்து பேசினார். உடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் உள்ளனர்.

### எடப்பாடி பழனிசாமி கைதுக்கு கண்டன ஆர்ப்பாட்டம்!

# அ.தி.மு.க.வினர் மீதான வழக்கை ரத்து செய்ய முடியாது!

## கூடுதல் அரசு வழக்கறிஞர் பா.நம்பிசெல்வன் வாதத்தையடுத்து - மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவு!

மதுரை, ஜூன் 9-

எடப்பாடி பழனிசாமி கைதுக்கு கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அ.தி.மு.க.வினர் மீதான வழக்கை ரத்து செய்ய முடியாது என்று மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

திண்டுக்கல் மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் ராஜ்மோகன், அ.தி.மு.க. நிர்வாகி ராஜன் ஆகியோர் மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

கடந்த ஆண்டு தமிழக சட்டசபை எதிர்க்கட்சி துணைத்தலைவராக முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அங்கீகாரம் செய்யப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னாள் முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமி சென்னையில் உண்ணாவிரதம் இருக்க முயன்றார். இதையடுத்து அவரை போலீசார் கைது செய்தனர்.

போலீசாரின் இந்த நடவடிக்கையை கண்டித்து திண்டுக்கல் - திருச்சி சாலையில் அமைதியான முறையில் பொதுமக்களுக்கு எந்த தொந்தரவும் இல்லாத வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றோம்.

ஆனால் நாங்கள் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்ததாகவும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் கூறி, திண்டுக்கல் டவுன் மேற்கு போலீசார் நாங்கள் உள்பட 18 பேர் மீது வழக்குப் பதிவு செய்தனர். அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே எங்கள் மீது வழக்குப்பதிவு செய்து உள்ளனர். இந்த நடவடிக்கை பழிவாங்கும் வகையில் உள்ளது. எனவே எங்கள் மீதான வழக்கை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறியிருந்தனர்.

இந்த மனு நீதிபதி இளங்கோவன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது கூடுதல் அரசு வழக்கறிஞர் பா.நம்பிசெல்வன் ஆஜராகி, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் மனுதாரர் தரப்பினர் நடக்க முயன்றதால்தான் போலீசார் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து உள்ளனர். மனுதாரர் உள்ளிட்டோர் மீதான வழக்கில் போலீசார் முறையாக விசாரணை நடத்தி குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்து விட்டனர். எனவே மனுதாரர்களின் கோரிக்கை ஏற்புடையதல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதாடினார்.

விசாரணை முடிவில், மனுதாரர்கள் மீதான வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விட்டதால், அவர்கள் மீதான வழக்கை ரத்து செய்ய முடியாது. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனுதாரர்கள் தேவைப்பட்டால் புதிதாக மனு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக் கொள்ளலாம் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - முதல்வரின் 70வது பிறந்தநாளையொட்டி

# சிங்கம்புணரியில் தென்னிந்திய அளவில் பெண்களுக்கான மின்னொளி கபடி போட்டி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நாளை துவக்கி வைக்கிறார்!

சிங்கம்புணரி, ஜூன், 9-

சிங்கம்புணரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் முதல்வர் அவர்களின் 70 வது பிறந்த நாளை முன்னிட்டு தென்னிந்திய அளவில் பெண்களுக்கான மாபெரும் மின்னொளி கபடி போட்டியை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தொடங்கி வைக்கின்றார்.

சிங்கம்புணரியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தென்னிந்திய அளவில் மூன்றாம் ஆண்டு மாபெரும் பெண்களுக்கான மின்னொளி கபடி போட்டி நடைபெற உள்ளது . தமிழ்நாட்டில் ஐந்து முறை முதலமைச்சர் சிம்மாசனத்தை அலங்கரித்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் -முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 70 வது பிறந்த நாளை முன்னிட்டும் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி திராவிட முன்னேற்றக் கழக ஒன்றிய, நகர மற்றும் சார்பு அணிகள் சார்பில் தென்னிந்திய அளவில் மாபெரும் மூன்றாம் ஆண்டு பெண்களுக்கான மின்னொளி கபடி போட்டி 10.06.23 சனிக்கிழமை மற்றும் 11.06.23 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள் நடைபெற உள்ளது.

மாபெரும் மின்னொளி கபாடி போட்டியை கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் தொடங்கி வைக்க உள்ளார். இந்த போட்டிக்காக சிங்கம்புணரி சேவகப் பெருமாள் அய்யனார் கோவில் பின்புறம் உள்ள கலையரங்கம் முன்புள்ள மைதானத்தில் கலரி அமைக்கும் பணி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 70 வது பிறந்த நாளை முன்னிட்டும் சிங்கம்புணரியில் மூன்றாம் ஆண்டு நடைபெற உள்ள பெண்களுக்கான தென்னிந்திய அளவில் மின்னொளி கபடி போட்டியில் பல மாநிலங்கள், மாவட்டங்களில் இருந்து வருகின்ற அணிகள் (பெண்கள் மட்டுமே) கலந்து கொள்ளும் இந்த போட்டியில் வெற்றி பெறும் முதல் வெற்றியாளருக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் சொந்த நிதியிலிருந்து முதல் பரிசாக ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ரொக்க தொகையை வழங்க உள்ளார்.

இரண்டாம் பரிசாக சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி மன்ற தலைவரும் பொதுக்குழு உறுப்பினருமான அம்பலமுத்து 75 ஆயிரத்து 70 ரூபாய் வழங்க உள்ளார்.

மூன்றாம் பரிசாக முறையூர் ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ் 50 ஆயிரத்து 70 ரூபாய் வழங்க உள்ளார்.

நான்காம் பரிசாக சிங்கம்புணரி தேர்வு நிலை பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் இந்தியன் செந்தில் 25 ஆயிரத்து, 70 ரூபாய் ரொக்கப் பரிசுகளை வழங்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிங்கம்புணரி ஒன்றிய, நகர தி.மு.க. மற்றும் சார்பு அணிகள் செய்து வருகின்றனர்.



திருவள்ளூர்வட்டாட்சியர்அலுவலகத்தில்பொதுமக்களின்குறைகளைத்தீர்க்கும்வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) காயத்திரி சுப்ரமணியம் தலைமை தாங்கினார் . வட்டாட்சியர் ந.மதியழகன், நீதியியல் வட்டாட்சியர் மீனா, வட்ட சார் ஆய்வாளர் செந்தில் ஆகியோர் முன்னிலை நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, திருவள்ளூர் குறுவட்டத்திற்கு உட்பட்ட பெரும்பாக்கம், புங்கத்தூர், ஓதிக்காடு, புன்னப்பாக்கம், சேலை, காக்களூர், கல்யாணக்குப்பம், தண்டலம், ஈக்காடு, பெரியகுப்பம், புட்லூர் ஆகிய கிராம மக்கள் பட்டா மற்றும்சான்றிதழ்கள்கேட்டுமனுஅளித்தனர். இதில் 7பேருக்குஉடனடிதீர்வுகாணப்பட்டு பட்டாவழுங்கநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டது. ஒன்றியசெயலாளர்ஆர். ஜெயசீலன், நகர மன்ற தலைவர் உதமலர் பாண்டியன், அவைத் தலைவர் தா.எத்திராஜ் , மண்டல துணை வட்டாட்சியர் அம்பிகா, திருவள்ளூர் வருவாய் ஆய்வாளர் கணேஷ், தலைமை நில அளவையர்செந்தில்குமரன், விஏஓக்கள்வி.சுந்தர்ராஜ், கிருஷ்ணன், விஸ்வநாதன், குமரன், பரணிதரன், பிரதீப்குமார், சுந்தர்ராஜ், சுகுமார், சீனு, ஆனந்தவேலு, ஆனந்தவேலு, பாரதி, பூங்கொடி, மலர்க்கொடி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மராட்டிய கடலோர பகுதிகளில் பலத்த மழைக்கு வாய்ப்பு!

மும்பை, ஜூன் 8

பிப்பர்ஜாய் புயலால் வருகிற 5 நாட்களுக்கு மராட்டிய கடலோர பகுதிகளில் பலத்த மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

தென்மேற்கு பருவமழை தொடங்குவதில் தாமதம் நிலவி வருகிறது. இந்த நிலையில் அதற்கான சாத்தியகூறுகள் தற்போது நெருங்கி வருகிறது.

அரபிக்கடலில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு காற்ற ழுத்த தாழ்வு மண்டலம் தீவிரமாகி புயலாக வலுப்பெற்றது. இந்த புயலுக்கு பிப்பர்ஜாய் என இந்திய வானிலை ஆய்வு மையம் பெயர் சூட்டி உள்ளது.

இந்த புயல் மெதுவாக தரைப்பகுதியை நோக்கி நகர்ந்து வருவதால் வருகிற 5 நாட்களுக்கு மராட்டியம், கோவா, கர்நாடகா மற்றும் கேரளாவின் கடலோர பகுதியில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

மும்பையை பொறுத்த வரையில் வார இறுதியில் பலத்த மழையை சந்திக்க வாய்ப்பு உள்ளது. இதைத்தவிர கொங்கன் பகுதியில் கனமழை முதல் மிககன மழை வரையில் பெய்யக்கூடும். தற்போது புயல் கிழக்கு மத்திய அரபிக்கடலில் வடக்கு நோக்கி நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் தீவிர புயலாக வலுவடையும்.

இதன் காரணமாக அரபிக்கடலில் அடுத்த 5 நாட்களுக்கு காற்றின் வேகம் மணிக்கு 80 கி.மி முதல் 155 கி.மீ வரை இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

புயல் கரையை கடந்த பிறகு தென்மேற்கு பருவ மழை வருகிற 12ந்தேதி பிறகு தான் தொடங்க இருப்பதாக தெரிவித்து உள்ளனர்.

### காஞ்சிபுரம் - செங்கல்பட்டு மாவட்டத்திற்கான

# திட்டக் குழு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர்கள் பட்டியல் விவரம்!

## மாவட்டச் செயலாளர்கள்–அமைச்சர் தா.மோ.அன்பரசன் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!





காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்திற்கான திட்டக் குழு உறுப்பினர்கள் தேர்தல் வருகிற 23.06.2023 அன்று நடைபெற உள்ளது. மேற்கண்ட இந்த இரு மாவட்டங்களுக்கான திட்டக்குழு தேர்தலில் ஊரகப் பகுதி மற்றும் நகரகப் பகுதிகளுக்கான திட்டக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கு போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர்களை காஞ்சிபுரம் வடக்கு மற்றும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தின் சார்பில் பரிந்துரை செய்கிறோம்.

இத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் விவரம் வருமாறு:

### காஞ்சிபுரம் மாவட்டம்

**ஊரகப் பகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள்**

| வ.எண் | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | வேட்பாளர்கள் பெயர் |
|---|---|---|
| 1 | 1 வது வார்டு உறுப்பினர் | நித்தியா சுகுமார் |
| 2 | 3 வது வார்டு உறுப்பினர் | ப.இராம்மூர்த்தி |
| 3 | 4 வது வார்டு உறுப்பினர் | பாலா (எ) பால்ராஜ் |
| 4 | 5 வது வார்டு உறுப்பினர் | நந்தம்பாக்கம் வே.அரி |
| 5 | 7 வது வார்டு உறுப்பினர் | அமுதா செல்வம் |
| 6 | 8 வது வார்டு உறுப்பினர் | பொற்கொடி செல்வராஜ் |
| 7 | 10 வது வார்டு உறுப்பினர் | பா.பத்மா பாபு |
| 8 | 11வது வார்டு உறுப்பினர் | கோ. சிவராமன் |

**நகரப் பகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள்**

| வ. எண் | மாநகராட்சி/ நகராட்சி/ பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் | வேட்பாளர்கள் பெயர் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சி 36 வது வார்டு உறுப்பினர் | கு.சுப்புராயன் (எ) சுதா |
| 2 | குன்றத்தூர் நகராட்சி 8வது வார்டு உறுப்பினர் | ந. கருணாநிதி |
| 3 | மாங்காடு நகராட்சி 7 வது வார்டு உறுப்பினர் | து. பெருமாள் ராஜ் |
| 4 | உத்திரமேரூர் பேரூராட்சி 9 வது வார்டு உறுப்பினர் | கி. தனசேகரன் |

### செங்கல்பட்டு மாவட்டம்

**ஊரகப் பகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள்**

| வ.எண் | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | வேட்பாளர்கள் பெயர் |
|---|---|---|
| 1 | 5 வது வார்டு உறுப்பினர் | வி. பூங்கோதை ராஜன் |
| 2 | 7 வது வார்டு உறுப்பினர் | தா ஜெயச்சந்திரன் |
| 3 | 8 வது வார்டு உறுப்பினர் | ஆர்.கே. ரமேஷ் |
| 4 | 10 வது வார்டு உறுப்பினர் | செ. மாலதி |
| 5 | 14 வது வார்டு உறுப்பினர் | மு. குணசேகரன் |
| 6 | 15 வது வார்டு உறுப்பினர் | ம. ஜெயலட்சுமி |

**நகரப் பகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள்**

| வ. எண் | மாநகராட்சி/ நகராட்சி/ பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் | வேட்பாளர்கள் பெயர் |
|---|---|---|
| 1 | மறைமலைநகர் நகராட்சி 20வது வார்டு உறுப்பினர் | டி. மூர்த்தி |
| 2 | தாம்பரம் மாநகராட்சி 56வது வார்டு உறுப்பினர் | எஸ். சேகர் |
| 3 | தாம்பரம் மாநகராட்சி 2வது வார்டு உறுப்பினர் | இரா.நரேஷ் கண்ணா |
| 4 | செங்கல்பட்டு நகராட்சி 33வது வார்டு உறுப்பினர் | கே.ஜி.சந்தோஷ் கண்ணன் |
| 5 | மதுராந்தகம் நகராட்சி 15வது வார்டு உறுப்பினர் | ஆர். பரணி |
| 6 | கருங்குழி பேரூராட்சி 3வது வார்டு உறுப்பினர் | சு. துர்காதேவி |

காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்திற்கான ஊரக மற்றும் நகரகத் திட்டக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கு போட்டியிடுவதற்காக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள மேற்கண்ட கழக வேட்பாளர்களை காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி நகராட்சி பேரூராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வெற்றி பெற செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர்,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

# பழங்குடியின பெண்களுக்கு சொத்தில் சம உரிமை!

## பரிசீலிக்கப்படும் என மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி.க்கு ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூன் 9-

இந்து மதத்தைப் பின்பற்றும் பழங்குடியினப் பெண்களுக்கு சொத்துக்களின் மீது சமமான பங்குகளைப் பெறுவதற்கு ஏதுவாக, இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் நன்மை பயக்கும் விதிகளைப் பயன்படுத்துமாறு ஒன்றிய அமைச்சர்களை கழக மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தார். மேலும், குடியரசுத் தலைவரைச் சந்தித்தபோதும் இதுகுறித்து கோரிக்கை வைத்தார். குடியரசுத் தலைவரும் இதுகுறித்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறி அக்கடிதத்தை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி வைத்தார்.



இதனைத் தொடர்ந்து, இந்த விவகாரம் குறித்து பதில் எழுதியுள்ள ஒன்றிய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், இந்த விவகாரம் தொடர்பாக பழங்குடியினர் விவகாரத்துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, சமூக நீதித் துறை மற்றும் அதிகாரமளித்தல் துறை ஆகியவற்றின் அமைச்சர்களோடு கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும், மேலும், இந்த விவகாரம் அரசியலமைப்பின் 7வது அட்ட வணையின் பிரிவு IIIன் படி மாநிலப்பட்டியலில் வருவதால் மாநில அரசுகளுடனும் கலந்தாலோசனை தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்து பழங்குடியின பெண்கள் சொத்தில் சமபங்கினைப் பெறுவதற்கான உரிமைகள் பரிசீலிக்கப்படும் என்று ஒன்றிய அமைச்சர் கூறியிருப்பதை மகத்தான வெற்றியாக கருதுவதாகவும், பழங்குடியின மகளிருக்கு சம உரிமைகளை வழங்கும் வகையில், அனைத்துத் தரப்பினராலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது மகிழ்ச்சியளிப்பதாகவும் வில்சன் எம்.பி. கூறியுள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றியம் பினாயூர் ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு நிதியின் கீழ் ஒரு கோடி 50 லட்சம் தார் சாலை அமைக்கும் பணியினை மாவட்டச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் டி.குமார், ஊராட்சி மன்ற தலைவர் பி.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கோ.சிவராமன். கு.துரைவேல், பவுன்சின் ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பாலமுருகன், வெங்கட்ராமன், லோகநாதன், முருகன், பன்னீர்செல்வம், ஒப்பந்ததாரர் யோகநாதன் பரமசிவம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.